admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்







| Vol: 03 | Issue: 158 | 4 Pages | 6.1.2026 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 158 | 4 பக்கங்கள் | 6.1.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து**
**துன்னியார் துன்னிச் செயின்**

**விளக்கம்:**
**தக்கஇடத்தைஅறிந்துபொருந்தியவராய்ச் செயலைச்செய்வாராயின்,அவரைவெல்ல எண்ணியிருந்த பகைவர் தம் எண்ணத்தை இழந்துவிடுவார்.**

## டெல்லி கலவர வழக்கு உமர் காலித்துக்கு ஜாமீன் வழங்க மறுப்பு



புது டெல்லி, ஜன.6

டெல்லி கலவர வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள உமர் காலித், ஷர்ஜீல் இமாமுக்கு ஜாமீன் வழங்க சுப்ரீம் கோர்ட்டு மறுத்துள்ளது.

வடகிழக்கு டெல்லியில் கடந்த 2020ஆம் ஆண்டு பிப்ரவரியில் குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு (சிஏஏ) எதிர்ப்பு தெரிவித்து நடைபெற்ற போராட்டங்கள், வன்முறையாக மாறி நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தக் கலவரத்தில் 53 பேர் உயிரிழந்தனர். 700க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தக் கலவர வழக்கில் ஜேஎன்யு முன்னாள் மாணவர்கள் ஷர்ஜீல் இமாம், உமர் காலித் உள்பட சிலர் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

ஜாமீன் கோரி ஐகோர்ட்டை உமர்காலித் அணுகியிருந்த நிலையில் ஜாமீன் மறுக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து அவர் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்திருந்தார்.

இந்தநிலையில், இன்று இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் அரவிந்த்குமார் மற்றும் அஞ்சாரியா அடங்கிய அமர்வு , உமர் காலித், ஷர்ஜீல் இமாமுக்கு ஜாமீன் வழங்க மறுத்துள்ளது. அதேநேரத்தில், இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்த குல்பிஷா பாத்திமா, மீரான் ஹெய்டர், ஷிபா உர் ரெஹ்மான், முகமது சலீம் கான், ஷதாப் அஹமத் ஆகிய மற்ற 5 பேருக்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் அவரது ஜாமீன் மனுக்கள் பலமுறை நிராகரிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்டர்நெட் தேவையில்லை: மொபைலில் லைவ் டிவி பார்க்கலாம்: விரைவில் வரும் வசதி

செல்போன்கள் பயன்படுத்தாதவர்களே இல்லை என்று சொல்லும் அளவிற்கு தற்போது அனைவரது கைகளிலும் ஆறாம் விரலைப் போல செல்போன்கள் உள்ளன. அதிலும் இணைய வசதி கொண்ட ஸ்மார்ட் போன்கள் வந்த பிறகு மக்களின் பிரதான பொழுதுபோக்கு அம்சமாக செல்போன்களே மாறிவிட்டன. இன்றைய ஜென்சி தலைமுறையினர் பலர் டிவி பார்க்காமல் இருந்து விடுவார்கள். செல்போன் இன்றி இருக்க மாட்டார்கள். அந்த அளவுக்கு செல்போன்கள் சிறந்த பொழுதுபோக்கு சாதனமாக மாறிவிட்டது. எனினும் இணைய வசதிதான் இதற்கு ஆக்சிஜன் போல உள்ளது. இணைய வசதி இல்லையென்றால் யூடியூபில் வீடியோ, லைவ் தொலைக்காட்சிகளை பார்க்க முடியாது.

ஆனால், இதனை மாற்றும் வகையில் புதிய தொழில்நுட்பத்தை இந்தியா தீவிரமாக ஆய்வு செய்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. அதாவது 'டைரக்ட் டு மொபைல்' என்ற புதிய தொழில்நுட்பத்தை கொண்டு வரும் முயற்சியில் தொலைத்தொடர்புத் துறை ஈடுபட்டுள்ளது.

இந்த தொழில்நுட்பத்தின் மூலம் லைவ் டிவி நிகழ்ச்சிகளை மொபைலில் பார்வையாளர்கள் இணைய வசதி இல்லாமலேயே கண்டுகளிக்க முடியும். தற்சமயம் சோதனை முயற்சியில் இருக்கும் இந்த டெக்னாலஜியை கூடிய விரைவில் இந்தியாவில் 19 நகரங்களில் பெரும் அளவில் அறிமுகப்படுத்த இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. அதெப்படி இணையம் இல்லாமல் இயங்கும் என கேள்வி எழலாம். செயற்கைக்கோள் மூலம் நேரடியாக செல்போனுக்கு வழங்கப்படும் தொழில்நுட்ப அடிப்படையில் இது இயங்கும்.

இதற்காக பிரத்யேக சிப் பொருத்தப்பட்ட செல்போன்களை தயாரிக்கும் பணியில் சில தனியார் நிறுவனங்கள் ஈடுபட்டு உள்ளதாக கூறப்படுகிறது. ரேடியோ ஸ்டேஷனில் இருந்து வரும் சிக்னலை ரிசீவர் பிடித்து எப்படி ஒலிபரப்பு செய்கிறதோ, அதே மாதிரி டிவி சேனல்களின் சிக்னலை இந்த சிப் பிடித்து வீடியோவை ஒளிபரப்பும்.

அதன்படி, பெங்களூருவில் உள்ள 'சான்கியா லேப்ஸ்' என்ற நிறுவனம் இந்த சிப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு உள்ளது. முதல் கட்டமாக சில முக்கிய நகரங்களில் பிரசார் பாரதி சேனல்கள் சேவையை வழங்க உள்ளன. அதன் பிறகு மற்ற சேனல்களும் சேர்க்கப்படலாம். பின்னர் அதற்கு கிடைக்கும் வரவேற்பை பொறுத்து படிப்படியாக நாடு முழுவதும் இந்த சேவை விரிவுபடுத்தப்படக்கூடும்.

பேரிடர் காலங்களிலும் செல்போன் சிக்னல் இல்லாத பகுதிகளுக்கும் இது பெரும் பயனளிக்கும் என்று தெரிகிறது. இந்த சேவையை முடிந்தவரை விரைவாக கொண்டு வர அரசு தீவிரம் காட்டி வருகிறது. அதே நேரத்தில், இணைய சேவையால் பெரும் லாபம் ஈட்டும் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

## சட்டவிரோத தகவல், படங்கள் பதிவிட்டால் தடை: பயனர்களுக்கு எக்ஸ் தளம் எச்சரிக்கை

புதுடெல்லி, ஜன.6

எலான் மஸ்கின் எக்ஸ் ஏ.ஐ. நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது கிரோக் ஏ.ஐ. பிரபல சமூக வலைத்தளமான எக்ஸ் தளத்துடன் இணைக்கப்பட்டு கிரோக் ஏ.ஐ. செயல்படுகிறது. எக்ஸ் தள பயனர்கள் சிலர் கிரோக் ஏ.ஐ. தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பெண்கள் மற்றும் சிறுமிகளின் புகைப்படங்களை சட்டவிரோதமாக ஆபாசமாக மாற்றி வருகின்றனர்.

மேலும் அவற்றை எக்ஸ் தளத்தில் தொடர்ந்து பதிவிட்டு வரவே அது வைரலாக பரவி வருகிறது.

இதுகுறித்து சிவசேனா எம்.பி. பிரியங்கா சதுர்வேதி மாநிலங்களவையில் கேள்வி எழுப்பினார். அப்போது எக்ஸ் தளத்தின் கொள்கைகளை கடுமையாக விமர்சித்தும் இதுகுறித்து மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டார்.

இந்தநிலையில் எக்ஸ் தளம் கிரோக் ஏ.ஐ.யை பயன்படுத்தி பெண்களின் ஆபாச படங்கள், பாலியல் ரீதியான படங்கள் மற்றும் வீடியோ பதிவுகளை உருவாக்கியவர்களின் கணக்குகளை தெரிவு செய்து அவற்றை உடனடியாக நீக்க வேண்டும் என நோட்டீஸ் அனுப்பி உள்ளது. இதற்கு 72 மணிநேரம் கெடு விதிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், இது தொடர்பாக எக்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "குரோக் ஏஐ செயலியை பயன்படுத்துபவர்கள் சட்டவிரோத தகவல்கள் மற்றும் படங்களை பதிவேற்றம் செய்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும். சட்டவிரோத தகவல்கள், படங்கள், வீடியோக்களை பதிவேற்றும் செய்பவர்களின் கணக்குகளுக்கு நிரந்தரமாக தடை விதிக்கப்படும்" என்று எச்சரித்துள்ளது.

# 10 லட்சம் மாணவ மாணவியருக்கு லேப்டாப் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை,

உலகம் உங்கள் கையில் எனும் பெயரில் லேப்டாப் திட்டத்தை நந்தம்பக்கம் வர்த்தக மையத்தில் கல்லூரி மாணவர்களின் வளர்ச்சிக்காக ம்டிக்கணினிகள்வழங்கும்திட்டத்தைமுதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

மடிக்கணினி வழங்கும் விழாவில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலி பேசியதாவது:

தமிழர்களான நாம், எப்போதும் கடந்த கால பெருமைகளைப் பேசுவோம். எதிர்காலப் பெருமைகளுக்காக உழைப்போம். ஆனால், ஒருபோதும் போலியான பெருமைகளைப் பேசிக் கொண்டு தேங்கிவிட மாட்டோம். உலகமே உங்கள் கையில் தான் உள்ளது என்பதே உண்மை. திறனும், பகுத்தறிவும், அறிவியல் பார்வை இணைந்து செயல்பட்டாலே புதுப்புது கண்டுபிடிப்பு வரும். பழைய பெருமையுடன் எதிர்கால திட்டத்தையும் பேசுவோம். 25 ஆண்டு முன்பே இனி கணினி காலம் என உணர்ந்து தொழில்நுட்பக்கொள்கையை கொண்டுவந்தார் கலைஞர்.




திராவிட இயக்கம் அறிவு இயக்கம், அறிவுக்கு முக்கியத்துவம் தரும் இயக்கம். மாணவர்களை வளர்க்கவே, நான் முதல்வன் திட்டம், லேப்டாப் வழங்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். மாணவர்களை வளர்த்தெடுத்தால்தான் மாநிலம் வளரும், நாடு வளரும். உலகம் உங்கள் கையில் என்பது வெறும் தலைப்பு கிடையாது. அதுவே உண்மை.அறிவியல் சார்ந்த கண்டுபிடிப்புகளை அடுத்தடுத்த தலைமுறைக்கு உடனே கிடைக்க செயல்படுகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

திறன்வளர்ச்சி, டிஜிட்டல்முன்னேற்றத்திற்காக 10 லட்சம் லேப்டாப்கள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றனர். 20 லட்சம் லேப்டாப்கள் வழங்கும் திட்டம் இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்படும் நிலையில் முதல் கட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அரசு பொறியியல், கலை அறிவியல், மருத்துவம், விவசாயம் உள்ளிட்ட துறைகளை சார்ந்த மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கப்பட உள்ளது.

## தாராபுரத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் சங்க கூட்டம்

தாராபுரத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் சங்க கூட்டம் நடைபெற்றது..

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் உள்ள ஒரு தனியார் மண்டபத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் சங்கத்தின் திருப்பூர் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட தலைவர் பி என் பாலு மாவட்ட செயலாளர் கே



துரைசாமி மாவட்டத் துணைத் தலைவர் எஸ் வெங்கடேஷ் உள்பட பலர் சிறப்புரையாற்றினர் இந்தக்கூட்டத்தின்போதுஇச்சங்கத்தின்இணைப்பு சங்கமான தமிழ்நாடு கொசு ஒழிப்பு பணியாளர்கள் சங்கத்தின் தலைவராக மாவட்ட தலைவர் T. நல்ல நல்லான் மாவட்டச் செயலாளராகK. முருகேசன். பொருளாளராகP. செல்வராஜ். மாவட்ட மாவட்ட மகளிர் அணி தலைவியாக முத்துலட்சுமி. சுமதி உள்பட நிர்வாகிகள் ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டது

## துண்டு துண்டாக வெட்டிக் கொன்று பெண் புதைப்பு: சங்கராபுரம் அருகே பயங்கரம்

image துண்டு துண்டாக வெட்டிக் கொன்று பெண் புதைப்பு: சங்கராபுரம் அருகே பயங்கரம்

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அடுத்த விரியூர் கிராமத்தைச் சேர்ந்தவர் மரிய ரொசாரியோ (36). இவரது மனைவி நந்தினி(29). இவர்களுக்கு இருபிள்ளைகள்உள்ளனர்.இவர்கள்குடும்பத்துடன் வடசேம பாளையம் கிராமத்தில் வாடகை வீட்டில் வசிக்கின்றனர். நந்தினியை கோயிலுக்கு அழைத்து செல்வதாகக் கூறி, அவரது மாமியார் கிறிஸ்தோப்மேரி கடந்த டிச.29ம் தேதி அழைத்து சென்றுள்ளார்.

பின்னர், நந்தினி மட்டும் வீடு திரும்பாத நிலையில், அவரை அழைத்து சென்ற கிறிஸ்தோப்மேரியிடம் மரியசொசாரியோ கேள்வி எழுப்பிய போது உரிய பதில் அளிக்கவில்லை. நந்தினியின் செல்போன் எண்ணும் ஸ்விட்ச்ஆப் செய்யப்பட்டிருந்தது. இது குறித்து சங்கராபுரம்




போலீஸார் காணாமல் போனவர் பிரிவில் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

கிறிஸ்தோப்மேரி மீது சந்தேகம் அதிகரித்த நிலையில், அவரிடம் போலீஸார் தீவிர விசாரணை நடத்தினர். இதில், தனது மகனை மறுமணம் செய்து கொண்ட மருமகள் நந்தினியை கொலை செய்து, அவரதுதலைமற்றும்உடல்பாகங்களைதுண்டித்தும் சங்கராபுரம் அடுத்த சோழம்பட்டு கிராமம் அழகாபுரம் செல்லும் சாலையில் உள்ள மணிமுக்தா ஆற்றங்கரை பகுதியில் வெவ்வேறு இடங்களில் புதைத்து இருப்பதாக தெரிவித்தார்.

இதையடுத்து தோப்மேரி அடையாளம் காட்டிய இடங்களில் தோண்டப்பட்டு, நந்தினியின் உடலை மருத்துவக் குழுவினர் பிரேத பரிசோதனை செய்தனர். இதன் அறிக்கை கிடைத்ததும் அடுத்தக்கட்ட நடவடிக்கையை போலீஸார் மேற்கொள்ள உள்ளனர்.

இந்நிலையில் நந்தினியின் உடல் வெட்டப்பட்டுள்ளதால், பெண் ஒருவர் தனி நபராக செய்திருக்க வாய்ப்பில்லை. அவருக்கு துணையாக சிலர் இருந்துள்ளது விசாரணையில் தெரியவந்துள்ளது. கிறிஸ்தோப்மேரி கைது செய்யப்பட்டார். கொலைக்கான காரணம் என்ன என்று விசாரணை நடந்து வருகிறது.

## சென்னை தெற்கு மாவட்டம் திமுக விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதியில் 1000 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா.

சென்னை தெற்கு மாவட்டம் திமுக விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதியில் 1000 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா. தமிழ்நாடு துணை முதல்வர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை மாநகராட்சி நிலை குழு கணக்கு மற்றும் தணிக்கைக்குழு தலைவர் தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகர் தலைமையில்,சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம். வி.பிரபாகர்ராஜா முன்னிலையில் கலைஞர் நகர் பகுதி கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் மு.இராசா,கே.கண்ணன் கலந்து கொண்டு உரையாற்றி நலத்திட்ட உதவிகளைவழங்கினர்கள்.இதில்பொதுக்குழு உறுப்பினர் உ.துரைராஜ்,கனிமொழி தனசேகர் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், பி.எஸ். முருகேசன், எஸ்.டி.தங்கராசன்,மாவட்ட துணை செயலாளர் பா.வாசுகிபாண்டியன், மாவட்ட பிரதிநிதி டி.எஸ்.பி.தென்னரசு,




வழக்கறிஞர் வட்ட செயலாளர் சதீஷ் கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர். அனைத்து ஏற்பாடுகளையும் கே.கே.நகர், ஆர். சுதாகரன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சிறப்பாக செய்திருந்தார்கள்.

## மாமல்லபுரத்தில் சிலை திருட்டை தடுக்க சிற்பிகள் நூதன முயற்சி

மாமல்லபுரத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக 10க்கும் மேற்பட்ட சிலை திருட்டு வழக்குகள் பதிவாகி இருந்தது., போலீசார் சி.சி.டீ.வி கேமராக்கள் மூலம் திருநங்கை உட்பட சிலரை கைது செய்தனர். தொடர்ந்து அம்மாள் நகர், கிழக்கு கடற்கரை சாலை பகுதிகளில் இரவு நேரத்தில் சிலைகள் திருடு போனது., போலீசார் ரோந்து மற்றும் வாகன சோதனைகள் மூலம் குற்றவாளிகளை பிடிக்க கண்காணித்து வந்தனர்.

இந்த நிலையில் தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் பகுதியை சேர்ந்த கோயில் பூசாரி கார்த்திக் என்பவர் சிவலிங்கம் சிலையை திருடி பைக்கில் கொண்டு சென்றபோது போலீசாரின் வாகன சோதனையில் அண்மையில் பிடிபட்டார். போலீசார் அவரிடம் இருந்த சிலையை பறிமுதல் செய்து செங்கல்பட்டு சிறையில் அடைத்தனர். இது போன்று சிலை திருட்டுகள் மேலும் தொடராமல் இருக்க, மாமல்லபுரம் சுற்றுவட்டார பகுதி சிற்பிகள் தாங்கள் விற்பனைக்காக சிற்பக்கலைக்கூடம் மற்றும் பட்டறைகளின் வெளியே காட்சிக்கு வைக்கும் சிலைகளைதற்போது சங்கிலி போட்டு கட்டி, பூட்டு போட்டு பாதுகாத்து வருகின்றனர்.



# உழவர்களை ஏமாற்றுவதே திமுகவின் கொள்கையா? அன்புமணி கேள்வி



சென்னை, ஜன.6

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

தமிழ்நாட்டில் ஆவின் நிறுவனத்திற்கு பால் வழங்கும் உழவர்களுக்கு லிட்டருக்கு ரூ.3 வீதம் வழங்கப்பட வேண்டிய ஊக்கத்தொகை கடந்த 4 மாதங்களாக வழங்கப்படவில்லை. மொத்தம் ரூ.200 கோடி அளவுக்கு நிலுவைத் தொகை அதிகரித்திருக்கும் நிலையில் அதை வழங்க திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காதது கண்டிக்கத்தக்கது.

இந்தியாவிலேயே ஆவின் நிறுவனம் தான் மிகக் குறைந்த விலைக்கு பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பாலை கொள்முதல் செய்து வருகிறது. இதை பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்ததைத் தொடர்ந்து பசும்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.35 , எருமைப்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.44 என்ற அளவில் ஆவின் நிறுவனத்தால் வழங்கப்பட்டு வந்த கொள்முதல் விலையுடன் சேர்த்து லிட்டருக்கு ரூ.3 வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழக அரசு அறிவித்தது. ஆனால், இந்த ஊக்கத்தொகை சரியாக வழங்கப்படவில்லை.

கடந்த செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களுக்கு மட்டும் ரூ.200 கோடி ஊக்கத்தொகை வழங்கப்படவில்லை ; இதனால் ஆவின் நிறுவனத்திற்கு பால் வழங்கும் 4 லட்சம் உழவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 2023 ஆம் ஆண்டில் ஊக்கத்தொகை அறிவிக்கப்பட்டபோது, அதை தமிழக அரசே வழங்கும் என்று தான் கூறப்பட்டது. ஆனால், கடந்த இரு ஆண்டுகளில் ஊக்கத்தொகைக்காக தமிழக அரசின் சார்பில் எந்த நிதியும் வழங்கப்படவில்லை. மாறாக, லாபத்தில் இயங்கும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் இருந்த உபரி நிதியை எடுத்து தான் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

அதனால் இப்போது அனைத்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களும் நலிந்து விட்டதால் அந்த வகையிலும் பணத்தை திருப்பி விட முடியவில்லை.

குஜராத்தின் அமுல், கர்நாடகத்தின் நந்தினி போன்ற பால் கூட்டுறவு அமைப்புகள் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் ஆவின் நிறுவனமும் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை லாபத்தில் தான் இயங்கி வந்தது. தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக,

ஆட்சிக்கு வந்தவுடன் ஆவின் பால் விலையை லிட்டருக்கு ரூ.3 வீதம் குறைத்ததால் ஆவின் நிறுவனத்திற்கு ஆண்டுக்கு ரூ.550 கோடி இழப்பு ஏற்பட்டது. அதை திமுக அரசு வழங்காததால் தான் ஆவின் நிறுவனம் நாளுக்கு நாள் நலிவடைந்து வருகிறது. திமுக ஆட்சியில் 5 முறை பால் பொருள்களின் விலைகள் உயர்த்தப்பட்டாலும் கூட ஆவின் நிறுவனத்தை லாபத்தில் இயக்க முடியவில்லை. அதற்கு காரணம் ஆட்சியாளர்களின் சுரண்டல்கள் தான்.

ஆவின் நிறுவனத்தால் இப்போது வழங்கப்பட்டு வரும் கொள்முதல் விலையே போதுமானது அல்ல.

அதிலும் ஊக்கத்தொகையை வழங்காமல் ஏமாற்றுவது நியாயமல்ல. உழவர்களை ஏமாற்றுவதையே திமுக அரசு கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. உழவர் பெருமக்கள் உழவர் திருநாளான பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ரூ.200 கோடி நிலுவைத் தொகையை உடனடியாக அரசு வழங்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடவுள் மனப்பான்மையில் பழனிசாமி வாழ்ந்து கொண்டிருக்கிறார் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் விமர்சனம்



சென்னை, ஜன.6

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"திமுக ஒரு கார்ப்பரேட் கம்பெனி" எனச் சொல்லும் பழனிசாமியின் அதிமுக, அடிமை கம்பெனியாக மாறி பல வருடங்கள் ஆகிவிட்டது. 2016ஆம் ஆண்டிலிருந்து 2024ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 10 தேர்தல்களில் தோற்ற பழனிசாமி 'வரும் சட்டமன்றத் தேர்தலில் அதிமுக ஆட்சி அமைப்பதை எந்தக் கொம்பனாலும் தடுக்க முடியாது' என்று சொல்வதைக் கேட்டு சின்னக் குழந்தையும் சிரிக்கும்.

"2021ல் சேலம் மாவட்டத்தில் உள்ள 11 இடங்களில் 10 இடங்களில் அதிமுக வெற்றி பெற்றது. இது அதிமுகவின் கோட்டை" என்று எடப்பாடி பழனிசாமி பேசியிருக்கிறார். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 39 தொகுதிகளை திமுக கூட்டணி கைப்பற்றியது. அந்த 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் அடங்கியிருக்கும் 234 சட்டமன்றத் தொகுதிகளில் 221 தொகுதிகளில் திமுக கூட்டணி முதலிடம் பெற்றது பழனிசாமிக்கு தெரியாதா? அதிமுகவின் கோட்டையான சேலத்திலேயே 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ஓட்டை விழுந்ததை எல்லாம் மறந்துவிட்டாரா?

55 ஆயிரம் மடிக்கணினிகளை மாணவர்களுக்கு வழங்காமல் வீணடித்த எடப்பாடி பழனிசாமி, லேப்டாப் பற்றி எல்லாம் பேசுவதற்கு அருகதை இருக்கிறதா?

20 லட்சம் கல்லூரி மாணாக்கருக்கு லேப்டாப் வழங்கும் "உலகம் உங்கள்கையில்"திட்டத்தை முதல்அமைச்சர் இன்று தொடங்கி வைக்கிறார். தொழில்நுட்ப அறிவியலை வலுப்படுத்த Dell, Acer, HP போன்ற உலகத் தரமான நிறுவனங்களின் மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கு வழங்கப்படும். இந்த மடிக்கணினிகளில் Intel i3 / AMD Ryzen 3 Processor, 8 GB RAM, 256 GB SSD, Windows 11 Home Strategic BOSS Linux OS ஆகிய மென்பொருள்கள் முன்னதாக நிறுவப்பட்டுள்ள நிலையில், நடைமுறையில் உள்ள கல்வி மற்றும் திட்டப் பணிகளுக்காக MS Office 365, மேலும் செயற்கை நுண்ணறிவு மென்பொருளான Perplexity Proவின் ஆறு மாத சந்தாவும் கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டு மாணவர்கள் உலகத்தோடு போட்டியிடும் வகையில் ஒவ்வொரு திட்டமாக வகுத்து வருகிறது திமுக அரசு.

மகளிர், அரசு ஊழியர், மாணாக்கர் என ஒவ்வொரு பிரிவினரும் முதல் அமைச்சரின் திட்டங்களால் பயன்பெறுவதைப் பார்த்து பொறுத்துக் கொள்ள முடியாமல் குமைகிறார் பழனிசாமி.

டீ கடையில் காசு இல்லாமல், "டேய் ஒரு டீ குடிக்க எவ்ளோ நடிக்க வேண்டியது இருக்கு உங்க முன்னாடி" என வடிவேலு பேசும் காமெடிதான் பழனிசாமி பேசுவதைக் கேட்கும் போது நினைவுக்கு வருகிறது. டீ கடையில் இரண்டு பேப்பர் படிக்கும் போது அதில் உள்ள செய்திகளில் தனக்கு எல்லாம் தெரிந்தவர் போல வடிவேலு தலையிட்டு உதார் விடுவார். அப்படிதான் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் எல்லாம் தன்னால்தான் வந்தது என பழனிசாமி நடிக்க வேண்டியிருக்கிறது. மகளிர்உரிமைத் தொகை, லேப்டாப், போன்றவற்றை அதிமுக குரல் கொடுத்ததால்தான் திமுக அரசு கொண்டு வந்தது என பழனிசாமி சொல்லிக் கொள்ளும் வரிசையில் இப்போது பொங்கல் பரிசுத் தொகுப்பிலும் பழனிசாமி தலையை நுழைத்திருக்கிறார். அடுத்து நாம் ஓர் திட்டம் கொண்டு வர முடிவு செய்தாலே, உடனே முந்திக் கொண்டு அதற்கு ஒரு கருத்தைச் சொல்லி, அது தன்னால் தான் வந்தது எனப் பெருமைப்பட்டு அரசியல் செய்வது எல்லாம் எதிர்கட்சித் தலைவர் செய்யும் செயலா?

"எல்லாமே என்னால் தான் நடந்தது" என்று ஒரு Mindset போபியா சிலருக்கு உண்டு. அதில், பழனிசாமியும் சேர்ந்து கொண்டார். "நான்தான் எல்லாம் செய்பவன்" என்ற "God Complex" அதாவது கடவுள் மனப்பான்மையில் பழனிசாமி வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

நம்முடைய திட்டங்கள் மக்களிடம் ஏற்பட்டிருக்கும் ஆதரவை எதிர்க் கட்சித் தலைவரே உணர்ந்ததால் தான் இப்படியெல்லாம் பேசி வருகிறார். பழனிசாமி அரசியல் செய்வதற்கும் நம்முடைய சாதனை திட்டங்கள் காரணமாக அமைந்திருக்கிறது. Election Eyewashக்காக லேப்டாப் கொடுக்கிறார் என சொல்கிறார் பழனிசாமி. அவருடைய God Complexஐ என்ன சொல்ல?

சேலத்தில் எடப்பாடி பழனிசாமி பேசிக் கொண்டிருந்த அதே நேரத்தில் தான் புதுக்கோட்டையில் உரையாற்றி கொண்டிருந்த மத்திய மந்திரி அமித்ஷா, "ஏப்ரலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி மலரும். பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் வளர்ச்சி பாதையில் பங்கேற்போம்" என்றார். 'கூட்டணி ஆட்சி' என ஆட்சியில் பங்கு என்றதோடு பழனிசாமியின் பெயரைக் கூட அமித்ஷா உச்சரிக்கவில்லை. "கூட்டணிக்கு தலைமை எடப்பாடி பழனிசாமிதான்" என அடிமைகள் வீராவேசம் காட்டினாலும் எஜமானர் அமித்ஷா, பழனிசாமி பெயரைக்கூட சொல்ல மறுக்கிறார்.. 'கூட்டணிக்கு தலைமை' என்ற பதவியிலேயே தடுமாறிக் கொண்டிருக்கும் பழனிசாமிதான் 'முதல்அமைச்சர் பதவி'க்கு வரப் போகிறாரா? "இந்த அவமானம் உனக்கு தேவையா?" என்ற நடிகர் வடிவேலுவின் காமெடிக்கு பொருத்தமான கேரக்டர் பழனிசாமிதான்! அவமானங்களை தாங்கி கொள்வது ஆயக்கலைகளிலும் அடக்காத ஒன்று தான் போல!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க அரசை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் சென்னை அமெரிக்க தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம்



சென்னை, ஜன.6

வெனிசுலாவின் தலைநகர் கராகஸ் நகரில் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் சுமார் 7 இடங்களில் அமெரிக்க ராணுவம் வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலை தொடர்ந்து வெனிசுலாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, வெனிசுலா நாட்டின் அதிபரும், அவரது மனைவியும் நாடு கடத்தப்பட்டதாக டிரம்ப் அதிரடியாக அறிவித்தார். இது தொடர்பாக அவர் சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டிருந்த பதிவில், "வெனிசுலா மீது அமெரிக்கா வெற்றிகரமான தாக்குதலை நடத்தியது. வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவும், அவரது மனைவியும் சிறைபிடிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர். அமெரிக்க சட்ட அமலாக்கத்துறையுடன் இணைந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது" என்று தெரிவித்திருந்தார்.

மேலும், வெனிசுலா நாட்டை அமெரிக்கா நிர்வாகம் செய்யும் என்று டிரம்ப் அறிவித்துள்ளார். இந்த சம்பவத்தை கண்டித்து பல நாட்டு தலைவர்களும் தங்களது கண்டனத்தை தெரிவித்தனர். அந்த வகையில் வெனிசுலாவில் நடந்த சமீபத்திய நிகழ்வுகள் கவலையளிப்பதாக இந்திய அரசு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், வெனிசுலா அதிபர் மதுரோவை அந்நாட்டிற்குள் புகுந்து அராஜகமாகப் பிடித்துள்ள அமெரிக்காவின் நடவடிக்கையைக்கண்டித்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர்இன்றுசென்னையில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இது குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின்அகில இந்திய கட்டுப்பாட்டுக்குழு தலைவர் ஜி. ராமகிருஷ்ணன், மாவட்டச் செயலாளர்கள் ஆர்.வேல்முருகன், ஜி. செல்வா, எம். ராமகிருஷ்ணன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் திடீரென அமெரிக்க தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தியதால் இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# கொடைக்கானலில் பல்வேறு பகுதிகளில் மீண்டும் உறைபனி




திண்டுக்கல், ஜன.6

வட இந்தியாவில் ஏற்பட்டுள்ள உயர்அழுத்தம் காரணமாக, வறண்ட வாடை காற்றின் ஊடுருவல் தென் இந்திய பகுதிகளில் வலுவடைந்து இருக்கிறது.

இந்த தாக்கத்தால் தமிழ்நாட்டில் இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் குளிர் அதிகரித்து வருகிறது. சில இடங்களில் அதிகாலை நேரங்களில் பனிமூட்டம் அதிகரித்து காணப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள புகழ்பெற்ற சுற்றுலா தளங்களான ஊட்டி, கொடைக்கானலில் கடந்த சில நாட்களாக பனியின்தாக்கம்குறைந்த நிலையில், தற்போது மீண்டும் உறைபனி சீசன் நிலவி வருகிறது. திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கீழ் பூமி, ஜிம்கானா பகுதிகளில் புல்வெளியில் உறைபனியும், அதற்கு மேல் பனிமூட்டமும், அதே சமயம் எதிர்மலையில் தென்படும் லேசான வெயிலும் சுற்றுலா பயணிகளுக்கு கண்கொள்ளா காட்சியாக அமைந்துள்ளது.

குறிப்பாக புல்வெளிகளில் இருக்கும் புற்கள் மீது உறைபனியானது அதிகாலை நேரங்களில் முத்து மணிகளைப் போல் ஒட்டிக் கொண்டு அழகாக காட்சியளிக்கிறது. இதனை சுற்றுலா பயணிகள் பல்வேறு கோணங்களில் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து மகிழ்கின்றனர்.

மேலும் நட்சத்திர ஏரியில் பனிமூட்டத்துடன் காணப்பட்ட ரம்மியமாக சூழல் சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்துள்ளது. புல்வெளிகள் மீது வெள்ளை போர்வை போர்த்தியது போல் ரம்மியாக காட்சியளிக்கிறது. மேலும், வாகனங்கள் மீதும் வெள்ளை பஞ்சு படலம் போல் உறைபனி படர்ந்து காணப்படுகிறது.

# தேயிலை தோட்டத்தில் புலி நடமாட்டம்; டிரோன் மூலம் வனத்துறை தீவிர கண்காணிப்பு

நீலகிரி, ஜன.6

நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே உள்ள பேர்த்தியாடா கிராமத்தில் நேற்று முன்தினம் தேயிலை தோட்டத்தில் புலி இருப்பதை கண்டு கிராம மக்கள் வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். காலில் பலத்த காயம் ஏற்பட்ட புலி பொதுமக்களை பார்த்தவுடன் வேகமாக ஓடாமல் மெதுவாக நடந்து சென்று, ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டது.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த வனத்துறையினர் டிரோன் மூலம் புலியை கண்காணித்தனர்.

அப்போது அந்த புலி தேயிலை செடிகளுக்கு மத்தியில் சென்று மிகவும் சோர்வுடன் படுத்து இருந்தது. முதுமலையில் இருந்து வன கால்நடை டாக்டர் அங்கு வராததால், புலியை வனத்துறை ஊழியர்கள் கண்காணித்து வந்தனர். புலி தேயிலை தோட்டத்தில் இருப்பதை உறுதி செய்ய, ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை இரவில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் கூடிய தெர்மல் டிரோன் மூலம் வனத்துறையினர் புலி இருப்பதை உறுதி செய்து கொண்டனர்.

அதேபோல பகல் நேரங்களிலும் தேயிலை தோட்டத்தில் புலி படுத்து இருப்பதை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். நேற்று காலை கண்காணித்த போது, நேற்று முன்தினம் படுத்திருந்த இடத்தில் இருந்து சற்று தூரம் நடந்து சென்று வேறு ஒரு இடத்தில் புலி படுத்திருப்பதை வனத்துறையினர் உறுதி செய்தனர். தொடர்ந்து தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். இருப்பினும், நேற்றும் தேயிலை தோட்டம் மற்றும் மலை காய்கறி தோட்டத்திற்கு பணிக்கு செல்ல வேண்டாம் என்றும், மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் வனத்துறையினர் அறிவுறுத்தினர்.

# திருப்பரங்குன்றம் விவகாரம்: மேல் முறையீட்டு வழக்கில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு



மதுரை, ஜன.6

திருப்பரங்குன்றம் தீபம் தொடர்பான வழக்கில், தனி நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் உத்தரவுக்கு எதிராக உயர் நீதிமன்ற அமர்வில் அறநிலையத் துறை மற்றும் தர்கா நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் மேல்முறையீடு செய்தனர். திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற உத்தரவை எதிர்த்து இந்த மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்சில் விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள் ஜி. ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வு இந்த வழக்கை விசாரித்தது. இந்த வழக்கில் காரசார வாதங்கள் முன்வைக்கப்பட்டன. அப்போது, தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன் வைத்த வாதத்தில், திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தூணில் தீபம் ஏற்றியதற்கான ஆதாரங்களை ராம. ரவிக்குமார் தாக்கல் செய்யவில்லை என்றார். திருப்பரங்குன்றம் மலை உச்சியில் இருப்பது தீபத் தூண் இல்லை என்பதில் அரசு உறுதியாக உள்ளது.

கடந்த 1920ஆம் ஆண்டில் மலையை ஆய்வு செய்த நீதிபதி, அங்கு தூண் இருந்திருந்தால் அதுபற்றி தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருப்பார். ஆனால் அவர் எதுவும் குறிப்பிடவில்லை. கோயிலின் வழக்கமான நிகழ்வுகளை விதிமுறைகளைப் பின்பற்றி நடத்துவதற்கு கோயில் நிர்வாகத்துக்கு முழு உரிமை உள்ளது. இந்த வழக்கை உரிமையியல் நீதிமன்றத்தில்தான் நடத்தி இருக்க வேண்டும். திருப்பரங்குன்றத்தில் சட்ட விதிமுறைகளைப் பின்பற்றித்தான் தீபம் ஏற்றப்படுகிறது.

பூஜை விதிகள், அர்ச்சனை முறைகள், வழிபாட்டு உரிமைகள் என அனைத்தும் முறையாகப் பின்பற்றப்படுகின்றன. எனவே, தீபம் ஏற்ற தனி நீதிபதி உத்தரவிட்டதை ஏற்க முடியாது. இந்த விவகாரம் தீபம் ஏற்றுவதற்கானதாக இருந்தாலும் அல்லது சொத்துரிமைக்கானதாக இருந்தாலும் கோயில் நிர்வாகம்தான் முடிவு செய்ய வேண்டும். உச்சநீதிமன்றம் எழுப்பிய கேள்வியின்படி, இந்த வழக்கு விசாரணைக்கு ஏற்புடையதா என்ற கேள்வி எழுகிறது. தனிநபர் கோயிலின் இடத்தில் 'இங்கேதான் தீபம் ஏற்ற வேண்டும்' என சொந்தம் கொண்டாட முடியுமா? இது சரியாக இருக்குமானால், அரசு சொத்தில் தனிநபர் உரிமை கோர இயலுமா? என்று வாதிட்டார்.இந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் முடிந்தநிலையில், தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில், திருப்பரங்குன்றம் வழக்கில் நாளை தீர்ப்பளிக்கப்பட உள்ளது.

# ஊட்டிக்கு கடந்த ஆண்டில் 20 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகை

ஊட்டி,

நீலகிரிக்கு சுற்றுலா வருபவர்களின் முதல் தேர்வாக அரசு தாவரவியல் பூங்கா உள்ளது. ஊட்டியில் உள்ள அரசு தாவரவியல் பூங்கா, கடல் மட்டத்தில் இருந்து 2,000 அடி உயரத்தில் மெக்ஐவர் என்ற ஆங்கிலேயரால் கடந்த 1847ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து கப்பல்கள் மூலம் தாவரங்களை கொண்டு வந்து நடவு செய்துள்ளனர். 50 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள பூங்காவில் 500க்கும் மேற்பட்ட தாவர வகைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

நூற்றாண்டை கடந்த தாவரவியல் பூங்கா, தற்போது தமிழக அரசின் தோட்டக்கலைத்துறை கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. கொரோனா காரணமாக கடந்த சில ஆண்டுகளாக சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை குறைந்திருந்த நிலையில், தற்போது மீண்டும் அதிகரிக்க தொடங்கி இருக்கிறது.

கடந்த 2022ம் ஆண்டு 24 லட்சம் சுற்றுலா பயணிகளும், 2023ம் ஆண்டு 28 லட்சம் சுற்றுலா பயணிகளும் தாவரவியல் பூங்காவை கண்டு ரசித்து சென்றனர். இதைத்தொடர்ந்து 2024ம் ஆண்டு 24 லட்சம் சுற்றுலா பயணிகள் வந்த நிலையில், கடந்த ஆண்டு 20 லட்சம் சுற்றுலா பயணிகள் மட்டுமே வந்துள்ளனர். இதன் மூலம் 2024ம் ஆண்டை விட 2025ம் ஆண்டு 4 லட்சம் சுற்றுலா பயணிகள் குறைவாக வந்துள்ளனர். இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், தாவரவியல் பூங்காவில் டிக்கெட் கட்டணம் அதிகரிப்புக்கு பின்னர் சுற்றுலா பயணிகள் கூட்டம் குறைந்துள்ளது. மேலும் ஊட்டியில் உள்ள கர்நாடகா பூங்கா அளவுக்கு, இங்குசிறப்புகள்இல்லை. இதனால் சுற்றுலா பயணிகள் வருகை குறைந்து வருகிறது. இதில் தோட்டக்கலைத் துறையினர் கவனம் செலுத்த வேண்டும் என்றனர்.

இதுபற்றி தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறுகையில், தோட்டக்கலைத் துறைக்கு நல்ல வருவாய் உயர்வு ஏற்பட்டிருக்கிறது. பூங்கா பராமரிப்புகளைத் தொடர்ந்து மேம்படுத்தி, பயணிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுப்போம். இபாஸ் உள்பட பல்வேறு காரணங்களால் சுற்றுலா பயணிகள் வருகை குறைந்து இருக்கலாம் என்றனர்.

# சின்னாறு நீர்த்தேக்கத்திலிருந்து விவசாய நிலம் பாசனத்திற்கு மாவட்ட கலெக்டர் தண்ணீர் திறந்து வைத்தார்



தருமபுரி, ஜன.6

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பஞ்சப்பள்ளி கிராமம் சின்னாறு நீர்த்தேக்கத்திலிருந்து 2025-2026 ஆம் (பசலி 1435) ஆண்டிற்கு விவசாய நிலம் பாசனத்திற்கு மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி முன்னிலையில் தண்ணீர் திறந்து வைத்தார்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பஞ்சப்பள்ளி கிராமத்தில் உள்ள சின்னாறு நீர்த்தேக்கத்திலிருந்து 2025-26 (பசலி 1435) ஆம் ஆண்டிற்கு பாசனத்திற்காக 05.1.2026 இன்று முதல் அரசாணை எண். 02 நீர்வளத் (என்.1) துறை, நாள் 02.01.2026ன்படி தமிழக முதல்வர் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட ஆணையிட்டுள்ளார்கள்.

அதன்படி தருமபுரி மாவட்டம். பாலக்கோடு வட்டம், பஞ்சப்பள்ளி கிராமம், சின்னாறு நீர்த்தேக்கத்திலிருந்து 2025-26 (பசலி 1435) ஆம் ஆண்டிற்கு பாசனத்திற்காக பழைய ஆயக்கட்டு பகுதி 5 ஏரிகளை நிரப்பி, புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு 05.01.2026 முதல் 24.05.2026 வரை 140 நாட்களுக்கு பாசனத்திற்கு என மொத்தம் 473.09 மி.கன அடி தண்ணீர் விடப்படும்.

இதன் மூலம் பழைய ஆயக்கட்டு பரப்பு 2626 ஏக்கர் மற்றும் புதிய ஆயக்கட்டு பரப்பு 1874 ஏக்கர் மொத்தம் 4500.00 ஏக்கர் நிலம் பாசனவசதி பெறும். மேலும், பஞ்சப்பள்ளி, பெரியானூர், போடிகுட்டப்பள்ளி, சாமனூர், அத்திமுட்லு, மாரண்டஅள்ளி, குஜ்ஜாரஅள்ளி, கொலசனஅள்ளி, பி.செட்டிஅள்ளி, ஜெர்த்தலாவ், பாலக்கோடு, எர்ரனஅள்ளி, பேளாரஅள்ளி ஆகிய கிராமங்கள் பாசன வசதி பயன்பெருகின்றன. பஞ்சப்பள்ளி கிராமம் சின்னாறு நீர்தேக்கத்தில் தற்போது உள்ள நீரின் அளவைக் கொண்டு நீரினை சிக்கனமாக பயன்படுத்தி, பாசனம் செய்து, ச்சல் பெறுமாறு கேட்டுகொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் பாலக்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன், நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் திரு. கணேஷ், மாரண்டஅள்ளி பேரூராட்சித் தலைவர் திரு. வெங்கடேசன், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாய பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கோவை, ராமநாதபுரம், திருச்சி சாலையில் உள்ள ஹோலி டிரினிட்டி பேராலயத்தின் 60வது ஆண்டு செபஸ்தியார் திருவிழாவை முன்னிட்டு, பங்கு தந்தை அருட்திரு மார்ட்டின் பட்டருமடத்தில் சிறப்பு திருவிழா மலரை வெளியிட அதை திருவிழா பொது ஒருங்கிணைப்பாளர் திரு. டாக்டர் தாமஸ் ரொனால்ட் பெற்றுக்கொண்டார். துணை பங்குதந்தை அருட்திரு மெல்வின் சோவ்வலூர்

# கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தலைமையில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



கிருஷ்ணகிரி, ஜன.6

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்ததாவது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வாரந்தோறும் திங்கட்கிழமை அன்று மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம், வீட்டுமனைப் பட்டா, விலையில்லா தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, முதியோர் உதவித்தொகை, சாலை வசதி மற்றும் மின் இணைப்பு போன்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து 315 மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மனுக்களில் தகுதியான மனுக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்கள் உடனடி நடவடிக்கை எடுக்கவும், தகுதியில்லாத மனுக்களுக்கு உரிய விளக்கத்தினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

தொடர்ந்து, மாவட்ட கலெக்டர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி 4ல் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 9 தேர்வர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், மாவட்ட வழங்கல் அலுவலர் கீதா ராணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) ராமஜெயம், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அபிநயா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) தர்மராஜ், துணை ஆட்சியர் (பயிற்சி) சௌமியா மற்றும் அனைத்து துறை முதன்மை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

# ஈரோடு மாவட்டத்தில் நீதிக் குழும அலுவலக கட்டிடம் திறப்பு



ஈரோடு, ஜன.6

ஈரோடு மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் மாவட்ட முதன்மை நீதிபதி எஸ். சமீனா, மற்றும் மாவட்ட கலெக்டர் ச.கந்தசாமி ஆகியோர் இளைஞர் நீதிக் குழும அலுவலக கட்டிடத்தினை திறந்து வைத்தார்கள்.

இளைஞர் நீதிச்சட்டம் 2015 மற்றும் அதன் விதிகள் செயல்படுத்துவதன் மூலம் 18 வயதிற்குட்பட்ட சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளை விசாரித்து, பாதுகாப்பு அளித்து, சீர்திருத்தி, மறு வாழ்வு அளிப்பதே இக்குழுமமத்தின் நோக்கமாகும். குழந்தைகளின் நலனை முன் நிறுத்தி சட்ட உதவி, ஆலோசனை, சமூக ஒருங்கிணைப்பு போன்றவற்றை உறுதி செய்து இளைஞர் நீதிக் குழுமம் செயல்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்ட இளைஞர் நீதிக் குழும அலுவலகம் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வந்த நிலையில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இளைஞர் நீதிக் குழுமம் செயல்பட ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிடத்தை இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

# நீலகிரி மாவட்ட கலெக்டர் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



ஊட்டி, ஜன.6

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், இன்று (05.01.2026) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப., அவர்கள், பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 115 கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.5,207/- மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரங்களையும், சாலை விபத்தில் உயிரிழந்த குன்னூர் வட்டம், தூதூர்மட்டம் மேலூர் கிராமத்தை சார்ந்த சுந்தரம் என்பவரின் வாரிசுதாரரான ராஜா என்பவருக்கு முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியிலிருந்து ரூ.1 இலட்சம் பெறுவதற்கான ஆணையினையும், கொடுங்காயம் அடைந்த 7 நபர்களுக்கு தலா ரூ.50,000/- வீதம் ரூ.3.50 இலட்சம் பெறுவதற்கான ஆணையினையும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு ரூ.26,000 திருமண நிதியுதவியாக பெறுவதற்கான ஆணைகளையும், சமூக நலத்துறை மூலம் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தலா ரூ.25,000/- பெறுவதற்கான வைப்பு பத்திரங்களையும் என மொத்தம் 17 பயனாளிகளுக்கு ரூ. 5.55 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம், உதகை வட்டம், தாவணெ பகுதியை சேர்ந்த மறைந்த கவிஞர் அருண் பாரதி என்பவர் இனிமையான இதய ஒலி இது என்ற தலைப்பில் எழுதிய கவிதை உலக தமிழ் பல்கலைகழகத்தால் சிறந்த புத்தகமாக தேர்வு செய்யப்பட்டு, வழங்கப்பட்ட பதக்கம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை, அன்னாரது பெற்றோர் நாகராஜ், வசந்தா மற்றும் கவிஞரின் ஆசிரியர் அமுதவல்லி ஆகியோர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

அதனை தொடர்ந்து, தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம் (திட்ட இயக்குநர்)/ மாவட்ட கண்காணிப்பு அலுவலர் டாக்டர் சு.வினீத் மற்றும் மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர்கள் இணைந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.9,500/- மதிப்பில் சிறப்பு சக்கர நாற்காலிகளை வழங்கினார்கள்.

முன்னதாக, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை தொடர்பான ஆய்வு கூட்டத்தில், மாவட்ட கலெக்டர், போதை பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு கையேடுகளை, பல்வேறு அரசுத்துறை அலுவலர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி என்.எஸ்.நிஷா இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மணிகண்டன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருநாவுகரசு, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.ராதாகிருஷ்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திருமதி லோகநாயகி (பொது), கண்ணன் (கணக்குகள்), மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி பிரவீணாதேவி, மாவட்ட மாற்றுதிறனாளிகள் நல அலுவலர் திரு.குப்புராஜ் உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அபுதாபியில் கார் விபத்து: கேரளாவை சேர்ந்த ஒரே குடும்பத்தினர் 4 பேர் உயிரிழப்பு



கேரளா, ஜன.6

கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தை சேர்ந்தவர் அப்துல் லத்தீப். இவர் துபாயில் வேலை பார்த்து வந்ததால், அங்கேயே தனது மனைவி ருக்சானா மற்றும் குழந்தைகளுடன் வசித்து வந்தார். இந்தநிலையில் அபுதாபியில் நடந்த விழாவிற்கு அப்துல் லத்தீப், தனது மனைவி மற்றும் ழந்தைகளை அழைத்துச் சென்றார். பின்பு அவர்கள் அனைவரும் தங்களது காரில் துபாய்க்கு திரும்பி வந்து கொண்டிருந்தனர். அபுதாபி துபாய் சாலையில் ஷஹாமா என்ற இடத்துக்கு அருகே வந்தபோது, அவர்களது கார் விபத்தில் சிக்கியது. இதில் அப்துல் லத்தீப்பின் மனைவி ருக்சானா, குழந்தைகள் ஆஷாஸ் (வயது 14), அம்மார்(12), அயாஷ்(5) ஆகிய 4 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும், அவர்களுடன் பயணம் செய்த வீட்டு வேலைக்கார பெண் புஷ்ராவும் இறந்துவிட்டார். இந்த விபத்தில் அப்துல் லத்தீப் காயத்துடன் உயிர்தப்பினார். விபத்தில் பலியானவர்களின் உடல்க அடக்கம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக, கேரளாவில் உள்ள அப்துல் லத்தீப்பின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

# தென் கொரிய அதிபர் லீ ஜே மியூங் சீனா பயணம்

சியோல், ஜன.6

சீனாவில் நடைபெற உள்ள உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தென் கொரிய அதிபர் லீ ஜே மியுங் புறப்பட்டுச் சென்றார். அங்கு அந்த நாட்டின் அதிபர் ஜி ஜின்பிங் உள்பட உயர் மட்ட அதிகாரிகளைச் சந்தித்து கொரிய தீபகற்பத்தில் அமைதியை மேம்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவார் என தென் கொரிய அதிபர் மாளிகை கூறியது. தென் கொரிய



அதிபர் லீ ஜே மியுங் சீனா புறப்படும்சில மணி நேரங்களுக்கு முன் வடகொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

# சேலம் மாவட்டத்தில் வீட்டு வசதி திட்டம் குறித்த ஆய்வுக்கூட்டம்: அமைச்சர் தலைமையில் நடைபெற்றது



சேலம், ஜன.6

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் முன்னிலையில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன் குமார் முன்னிலையில் வீட்டு வசதி திட்டம் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா பெருந்தொற்று கடுமையாக இருந்த காலகட்டத்தில் பொறுப்பேற்று தனது திறமையால் சிறப்பான ஆட்சியை மேற்கொண்டு வருகிறார்கள். உழைக்கும் மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் அனைத்து நன்மைகளும் கிடைக்க வேண்டும் என்று திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக மகளிர், மாற்றுத்திறனாளிகள், முதியோர் ஆகிய அனைத்து தரப்பு மக்களுக்கு அரசின் திட்டங்கள் அனைத்தும் நேரடியாக சென்றடையும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாக உடல் உழைப்பு தொழிலாளர்கள் மேல் மிகுந்த அக்கறை கொண்டு தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, விபத்து மரணம், ஓய்வூதியம் என அனைத்தையும் உயர்த்தி வழங்கி அவர்களை கை தூக்கி விடும் அரசாக சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் தொழிலாளர்களுக்கு வழங்கி வரும் அனைத்து திட்டங்களையும் அவர்களுக்கு சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன் குமார்க்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் நடைபெற்று வரும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் 3024 பயனாளிகளுக்கு ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் கல்வி உதவித்தொகை, 109 பயனாளிகளுக்கு ரூ.20.41 இலட்சம் மதிப்பீட்டில் திருமண உதவித் தொகை, 6 பயனாளிகளுக்கு ரூ.4500 மதிப்பீட்டில் கண் கண்ணாடி, 1 பயனாளிக்கு மாதந்தோறும் ரூ.1200 வழங்கும் ஓய்வூதியம், 8 பயனாளிகளுக்கு இயற்கை மரண உதவித் தொகையாக ரூ.2.80 இலட்சம், 1 பயனாளிக்கு விபத்து மரண உதவித் தொகையாக ரூ.2.05 இலட்சம், வீட்டு வசதி திட்டத்தின் கீழ் (எல் டைப்) 16 பயனாளிகளுக்கு ரூ.64 இலட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக்கொள்ள உதவித்தொகையும், வீட்டு வசதி திட்டத்தின் கீழ் (எம் டைப்) 20 பயனாளிகளுக்கு ரூ.29.11 இலட்சம் மதிப்பீட்டில் 20 பயனாளிகளுக்கு வீடுகளும் என மொத்தம் 3185 பயனாளிகளுக்கு ரூ.2.27 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. நலத்திட்ட உதவிகளை பெற்றுள்ள பயனாளிகள் தங்கள் வாழ்வில் மென்மேலும் உயர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் பேசியதாவது

முத்தாய்ப்பாக வீடு கட்டும் தொழிலாளர்களுக்கு கட்டாயம் சொந்த வீடு இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் சொந்தமாக மனை வைத்திருந்தால் வீடு கட்டிக்கொள்ள ரூ.4,00,000 உதவித்தொகையும், சொந்தமாக மனை இல்லாதவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வீடுகள் வழங்கும் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், கட்டுப்படுத்த முடியாத சர்க்கரை நோய், கேன்சர் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட கட்டுமானத் தொழிலார்களுக்கு ரூ.12,000, ஓய்வு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.1200 வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாட குடும்ப அட்டைதார்களுக்கு ரூ.3,000 வழங்கப்படும் என அறிவித்திருக்கிறார்கள். இவ்வாறாக கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தியுள்ளார்கள் மேலும், தேவைப்படும் அனைத்து உதவிகளையும் செய்திடவும் தமிழ்நாடு முதலமைச்சர் தயாராக உள்ளார்கள். இவ்வாறு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் இரா.பிருந்தாதேவி, தொழிலாளர் உதவி ஆணையர்கள் சண்பகராமன் (சமரசம்), திருநந்தன் (அமலாக்கம்) உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், தொழிற் சங்க பிரதிநிதிகள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

6.1.2026

# கவர்னர் தேநீர் விருந்து தமிழ்நாடு காங்கிரஸ் புறக்கணிப்பு



சென்னை, ஜன.6

நாட்டின் குடியரசு தினம் வரும் 26ம் தேதி கொண்டாடப்படுகிறது.. குடியரசு தினவிழாவையொட்டி தமிழக கவர்னர் ஆர்.என். ரவி, கவர்னர் மாளிகையில் அனைத்து கட்சிகளுக்கும் தேநீர் விருந்து வைக்க உள்ளார். இந்த தேநீர் விருந்தில் பங்கேற்கும்படி, தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ், பா.ஜ.க., உள்ளிட்ட பல்வேறு கட்சிகளுக்கு கவர்னர் மாளிகை அழைப்பு விடுக்கும்.

இந்நிலையில், குடியரசு தின விழாவையொட்டி கவர்னர் ஆர்.என். ரவி அளிக்கும் தேநீர் விருந்தை புறக்கணிப்பதாக காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது. இது குறித்து தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

தமிழ்நாடு மக்களால் பெரும்பான்மையாக தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு அரசுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் தொடர்ந்து துரோகம் இழைத்து வரும் கவர்னர் ஆர்.என்.ரவி வழங்கும் தேநீர் விருந்தை தமிழ்நாடு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கின்றோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்சியில் நடைபெறும் நம்ம ஊரு மோடி பொங்கல் விழா; அமித்ஷா பங்கேற்பு



சென்னை, ஜன.6

மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா இரண்டு நாள் சுற்றுப்பயணமாக திருச்சி வந்துள்ளார். நேற்று, பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனின் 'தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம்' என்ற பிரசாரப் பயணத்தின் நிறைவு விழாவில் பங்கேற்று உரையாற்றினார்.

இன்று காலை ஸ்ரீரங்கம் அரங்கநாதசுவாமி கோயிலுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்தார். இதனை தொடர்ந்து, தற்போது மன்னார்புரத்தில் நடைபெறும் 'மோடி பொங்கல் விழா' நிகழ்வில் பங்கேற்று வருகிறார். 'நம்ம ஊரு மோடி பொங்கல் விழா' என்ற வாசகத்துடன் 1,008 பானைகளில் பொங்கல் வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இதில் மேடையில் அமித்ஷாவும், மேடைக்கு கீழே ஆயிரக்கணக்கான பாஜக தொண்டர்களும் பொங்கலிட்டு வருகின்றனர்.

இந்த விழாவுக்கு பின்னர் கார் மூலம் திருச்சி விமான நிலையம்சென்று,அங்கிருந்துஅமித்ஷாபுதுடெல்லிக்கு புறப்பட்டுச் செல்கிறார்.

# இன்றைய ராசி பலன்கள் (6.1.2026)

**மேஷம்** புத்தாண்டு உங்களுக்கு உற்சாகத்துடன் தொடங்கும். நிலுவையில் இருந்த வேலைகள் விரைந்து முடியும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய முயற்சிகள் கைகூடும். பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும்.

**ரிஷபம்** நிதானமாகச் செயல்பட வேண்டிய நாள். தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படலாம். குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். பிற்பகலுக்குப் பின் சுபச் செய்திகள் வந்து சேரும்.

**மிதுனம்** தொழில் ரீதியாகப் பெரிய மாற்றங்கள் ஏற்படும். எதிர்பார்த்த பதவி உயர்வு அல்லது இடமாற்றம் கிடைக்க வாய்ப்புள்ளது. கணவன்மனைவி இடையே ஒற்றுமை பலப்படும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும்.

**கடகம்** வெற்றிகள் தேடி வரும் நாள். எடுத்த காரியங்களைச் சிறப்பாக முடிப்பீர்கள். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். ஆரோக்கியம் மேம்படும். நண்பர்களின் உதவி சரியான நேரத்தில் கிடைக்கும்.

**சிம்மம்** மனதில் தெளிவும் துணிச்சலும் பிறக்கும். பூர்வீக சொத்து விவகாரங்களில் சாதகமான தீர்ப்பு வரும். உறவினர்களுடன் இருந்த கசப்புகள் நீங்கும். பணவரவு திருப்தி தரும்.

**கன்னி** நிச்சயமற்ற நிலை மாறி தெளிவு பிறக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சி தரும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் அமையும். ஆன்மீகப் பயணங்கள் செல்ல நேரிடலாம்.

**துலாம்** சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும். புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் கைகூடும். வியாபாரத்தில் போட்டிகள் இருந்தாலும் லாபம் குறையாது. குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் திட்டமிடப்படும்.

**விருச்சிகம்** பேச்சில் நிதானம் தேவை. தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. செலவுகள் அதிகரித்தாலும், அதற்குரிய வருமானமும் வரும். கடின உழைப்பால் இலக்குகளை அடைவீர்கள்.

**தனுசு** ராசிநாதன் குருவின் ஆசியால் எதிலும் வெற்றி காண்பீர்கள். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிநாடு செல்லும் முயற்சிகள் பலிதமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும்.

**மகரம்** பொறுமையைக் கையாள வேண்டிய நாள். வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கும். கடன் சுமைகள் குறைய வாய்ப்புள்ளது. உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம்.

**கும்பம்** வருமானம் உயரும். திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். கலைத்துறையில் உள்ளவர்களுக்கு நல்ல அங்கீகாரம் கிடைக்கும்.

**மீனம்** உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். மனதுக்கு இனிய சம்பவங்கள் நடைபெறும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும்.

# ஈரோடு வ.உ.சி. பூங்காவில் புதர்மண்டி கிடந்த செடி, கொடிகள் அகற்றம்



ஈரோடு, ஜன.6

ஈரோடு மாநகர் பகுதியை சேர்ந்த பொதுமக்களுக்கு பொழுதுபோக்கு அம்சமாக ஈரோடு வ.உ.சி. பூங்கா உள்ளது. இந்த பூங்காவுக்கு மாநகர் பகுதியை சேர்ந்தவர்கள் மட்டுமின்றி ஈரோட்டை சுற்றி உள்ள ஏராளமானோர் இங்கு வந்து பொழுதை போக்கி செல்கின்றனர். இதனிடையே பூங்கா முழுவதும் செடி, கொடிகள் வளர்ந்து புதர்மண்டி காணப்பட்டது. காணும் பொங்கல் அன்று வ.உ.சி. பூங்காவுக்குள் ஏராளமான பெண்கள்கூடி ஆடிப்பாடி கொண்டாடுவர்கள். இதனால் பூங்காவை சுத்தம் செய்ய வேண்டும் என்று பெண்கள் கோரிக்கை விடுத்தனர். மேலும் இது குறித்த செய்தி 'தினத்தந்தி' நாளிதழில் பிரசுரமானது. சுத்தம் செய்யப்பட்டது. இதைத்தொடர்ந்து மாநகராட்சி அதிகாரிகள் கடந்த சில நாட்களாக பொக்லைன் எந்திரம் மூலம் ஈரோடு வ.உ.சி. பூங்காவை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்கு வளர்ந்திருந்த செடி, கொடி மற்றும் புதர்கள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டன.

இதுதொடர்பாக செய்தி வெளியிட்ட 'தினத்தந்தி' நாளிதழுக்கும், நடவடிக்கை எடுத்த மாநகராட்சி அதிகாரிகளுக்கும் பெண்கள் நன்றி தெரிவித்துள்ளனர். மேலும் இதுகுறித்து பெண்கள் கூறும்போது, 'வ.உ.சி. பூங்கா தற்போது சுத்தம் செய்யப்பட்டு உள்ளது. அங்கு உட்கார்வதற்கு வசதியாக இருக்கைகள் அமைக்க வேண்டும். சிறுவர்கள், சிறுமிகள் விளையாடி மகிழ ஊஞ்சல், சறுக்கு, சீசா உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்களும் அமைக்க வேண்டும். அவ்வாறு செய்தால்தான் மீண்டும் செடி, கொடிகள் வளராமல் பொதுமக்கள் பயன்பாட்டில் இருக்கும்' என்றனர்.

# ஹெத்தையம்மன் பண்டிகை உள்ளூர் விடுமுறை



நீலகிரி மாவட்டத்தில் வாழும் படுகர் இன மக்களின் குல தெய்வமான ஹெத்தையம்மன் எதிர்வரும் 7ம் தேதி நடைபெற உள்ள ஸ்ரீ ஹெத்தை அம்மன் பண்டிகை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்படுவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மேலும் இந்த விடுமுறையை 24 ம் தேதி சனிக்கிழமை அன்று வேலை நாளாக இருக்கும் என மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# மாவட்ட செயலாளர்களின் கருத்துகள் படி கூட்டணி குறித்து முடிவு: பிரேமலதா விஜயகாந்த்

சென்னை, ஜன.6

கடந்த சட்டசபை தேர்தலில் அதிமுக பாஜக கூட்டணியில் இடம்பெற்றிருந்த தேமுதிக, ராஜ்யசபா சீட் ஒதுக்காததால் கூட்டணியை விட்டு வெளியே வந்தது. நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் யாருடன் கூட்டணி என்பதை தேமுதிக இன்னும் அறிவிக்கவில்லை. வரும் 9ந் தேதி (வெள்ளிக்கிழமை) தேமுதிக மாநாடு நடைபெற இருக்கிறது.

இந்த மாநாட்டில் கூட்டணி குறித்த முக்கிய முடிவை அறிவிப்பதாக கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் ஏற்கனவே கூறியிருந்தார்.

இந்தநிலையில், தேமுதிக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் சென்னை கோயம்பேட்டில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமை தாங்கினார். மாநில நிர்வாகிகள் எல்.கே.சுதீஷ், இளங்கோவன், பார்த்தசாரதி உள்பட மாவட்ட செயலாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்திற்கு பிறகு செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த பிரேமலதா விஜயகாந்த் கூறியதாவது:

2026 தேர்தலில் யாருடன் கூட்டணி? என மாவட்டச் செயலாளர்கள் தங்களின் கருத்துகளை எழுதி பெட்டியில் போட்டுள்ளனர். அவற்றை தனிப்பட்ட முறையில் நான் பிரித்து படிக்க இருக்கிறேன். அவர்களின் கருத்து அந்தந்த மாவட்ட மக்களின் கருத்து. அதன்படியே கூட்டணி குறித்து முடிவு செய்து வரும் 9 ஆம் தேதி கடலூர் மாநாட்டில் அறிவிப்பேன். தொண்டர்கள் விரும்பும் கூட்டணியை அமைப்போம். தேமுதிகவுடன் கூட்டணி வைக்க அனைத்துக் கட்சிகளும் விரும்புகின்றன. முழுக்க முழுக்க தொண்டர்களின் விருப்பப்படியே கூட்டணி இருக்கும்" என்று தெரிவித்தார்.

# வசூல் வேட்டையில் ரன்வீர் சிங்கின் துரந்தர் திரைப்படம்




ஆதித்யா தார் இயக்கத்தில் ரன்வீர் சிங் நடிப்பில் சமீபத்தில் திரைக்கு வந்த படம் 'துரந்தர்'. 'தெய்வ திருமகள்' படத்தில் விக்ரமின் மகளாக நடித்து கவனம் ஈர்த்த சாரா அர்ஜுன் இதில் ரன்வீர் சிங்குக்கு ஜோடியாக நடித்திருக்கிறார். இந்த படத்தில் மாதவன், சஞ்சய் தத், அக்சய் கன்னா, அர்ஜுன் ராம்பால் உட்படப் பலர் நடித்திருக்கின்றனர்.

பாகிஸ்தானில் 'ஆபரேஷன் லியாரி' மற்றும் இந்திய உளவுத்துறை நிறுவனமான 'ரா' மேற்கொண்ட ரகசியப் பணிகளை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட இப்படம், 6 வளைகுடா நாடுகளில் தடை செய்யப்பட்டாலும், வசூலில் சாதனை படைத்து வருகிறது.

இந்த நிலையில், 'துரந்தர்' படம் வெளியான ஒரு மாதத்தில் உலகளவில் ரூ.1240 கோடி வசூல் செய்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. இப்படம் இந்தியாவில் மட்டும் ரூ.968 கோடி வசூல் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதே வேகத்தில் சென்றால், இப்படம் விரைவில் ரூ.2000 கோடி வசூலை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஓடிடி தள டிரெண்டிங்கில் முதல் இடத்தை பிடித்த 'பகவந்த் கேசரி'




இயக்குநர் எச்.வினோத் விஜய்யை வைத்து 'ஜனநாயகன்' படத்தை இயக்கி உள்ளார். இப்படத்தின் எடிட்டிங் பணிகள் வரை முடிவடைந்து பொங்கல் வெளியீடாக வரும் 9ம் தேதி திரைக்கு வர உள்ளது. இதில், நாயகியாக பூஜா ஹெக்டேவும் முக்கிய கதாபாத்திரத்தில் மமிதா பைஜூவும் நடித்துள்ளனர். மேலும் பிரியாமணி, பாபி தியோல், கவுதம் மேனன், நரேன் ஆகியோர் இப்படத்தில் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார்.

தீவிர அரசியலில் களமிறங்கி இருக்கும் விஜய் நடிக்கும் கடைசி படம் இதுதான் என்று கூறப்படுகிறது. இதனால் படத்துக்கு சினிமா தாண்டி அரசியல் களத்திலும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில், ஜனநாயகன் படத்தின் டிரெய்லர் கடந்த 3ம் தேதி வெளியானது. டிரெய்லரின் பல காட்சிகள் பகவந்த் கேசரி படத்துடன் ஒத்துப்போனது. இதனையடுத்து 'ஜனநாயகன்' படம் சுமார் 80 சதவீதம் 'பகவந்த் கேசரி' படத்தின் ரீமேக் என்ற கருத்து சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இதனால் விஜய் ரசிகர்கள் இப்படம் 'பகவந்த் கேசரி' படத்தின் ரீமேக்கா இல்லை ஒரிஜினல் கதையா என்பது தெரியாமல் தலையை பிய்த்துகொண்டிருக்கின்றனர்.

இது ஒருபுறம் இருக்க, பாலையா நடிப்பில் 2023ம் ஆண்டு தெலுங்கில் மாபெரும் வெற்றியை பெற்ற 'பகவந்த் கேசரி' படம் தற்போது அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில் டிரெண்டிங்கில் முதல் இடத்தை பிடித்துள்ளது.

# அதிக ரூ.1,000 கோடி படங்களில் நடித்த நடிகர்.... அல்லு அர்ஜுன், ஷாருக்கான் இல்லை யார் அவர் தெரியுமா?



இந்த நடிகர் பல பிளாக்பஸ்டர் வெற்றிப் படங்களில் நடித்துள்ளார். அவற்றில் மூன்று படங்கள் ரூ.1,000 கோடி வசூல் கிளப்பிலும் இடம்பிடித்துள்ளன. அவர் அல்லு அர்ஜுனோ, ஷாருக்கானோ, பிரபாஸோ இல்லை.

அவர் அந்த படங்களில் கதாநாயகனாக இல்லை, வில்லனாகவும், முக்கிய கதாபாத்திரத்தில் ங்களிலும் நடித்தார். அவர் வேறு யாரும் இல்லை சஞ்சய் தத்தான். இவர் நடித்த கே.ஜி.எப் 2, ஜவான் மற்றும் துரந்தர் ஆகிய 3 படங்களும் பாக்ஸ் ஆபீஸில் ரூ.1,000 கோடிக்கு மேல் வசூலித்தன.

சஞ்சய் தத், துரந்தர் மற்றும் கே.ஜி.எப் 2 படங்களில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தாலும், ஷாருக்கான் நடித்த 'ஜவான்' படத்தில் கேமியோ ரோலில் நடித்திருந்தார்.

சஞ்சய் தத் தமிழில், லியோ படத்தில் விஜய்யின் தந்தை கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். தற்போது சஞ்சய் தத் ,பிரபாஸுடன் தி ராஜா சாப் படத்தில் நடித்துள்ளார். இப்படம் வருகிற 10ம் தேதி தமிழிலும் மற்ற மொழிகளில் 9ம் தேதியும வெளியாக உள்ளது.

# இந்திய கால்பந்து வீரர்கள் வெளியிட்ட வேதனை வீடியோ நடிகர் ஜான் ஆபிரகாம் காட்டம்



ஐ.எஸ்.எல் (ISL) கால்பந்து தொடர் நடைபெறாமல் இருப்பதால், இந்திய கால்பந்தை காப்பாற்ற வேண்டும் என வீரர்கள் இணைந்து வீடியோ வெளியிட்டிருந்தனர். அதனை சமூக வலைதளத்தில் பகிர்ந்த நடிகர் ஜான் ஆபிரகாம் தனது காட்டத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

அதில், "இது நமக்கு அவமானம். இந்த நிலைக்கு நாம் வந்துவிட்டோம்" என வருத்தம் தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டு செப்டம்பரிலேயே தொடங்க வேண்டிய ஐ.எஸ்.எல்(ISL) கால்பந்து தொடர், போதிய நிதி இல்லாததால் இன்னும் நடத்தப்படவில்லை.

அடுத்த ஆண்டு தொடங்கிவிட்டதால் இந்திய கால்பந்தின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு குர்ப்ரீத் சிங் சந்து, சுனில் சேத்ரி உள்ளிட்ட இந்திய கால்பந்து வீரர்கள் வீடியோ வெளியிட்டனர்.

# விராட் கோலியின் சாதனை சமன்...39 வயதில் வரலாறு படைத்த டேவிட் வார்னர்




ஆஸ்திரேலிய நட்சத்திர வீரர் டேவிட் வார்னர்(39), கடந்த 3ம் தேதி பிக் பாஷ் லீக்கில் சிட்னி தண்டர் அணிக்காக ஆட்டமிழக்காமல் 130 ரன்கள் எடுத்தார். இதன் மூலம் தனது 9வது டி20 சதத்தைப் பதிவு செய்த அவர், இந்திய நட்சத்திர வீரர் விராட் கோலியின் சாதனையைச் சமன் செய்தார்.

65 பந்துகளில் 9 சிக்ஸர்கள், 11 பவுண்டரிகளுடன் 130 ரன்கள் குவித்த வார்னர், நடப்பு பிக் பாஷ் சீசனின் அதிகபட்ச தனிநபர் ஸ்கோரை பதிவு செய்தார். இதன் மூலம் ரோகித் சர்மாவை பின்தள்ளி, விராட் கோலிக்கு இணையாக 9 சதங்களை எட்டினார்.

அதிக டி20 சதங்கள் அடித்தவர்களின் பட்டியலில் கிறிஸ் கெய்ல் (22), பாபர் அசாம் (11) ஆகியோர் முதல் இரு இடங்களில் உள்ளனர். ரிலீ ரோசோ, விராட் கோலி, டேவிட் வார்னர் மூவரும் தலா 9 சதங்களுடன் அடுத்த இடங்களை பகிர்ந்துகொண்டுள்ளனர். ஒரு சதம் அடித்தால், வார்னர் மூன்றாவது அதிக சதம் அடித்த வீரர் ஆவார்.

# ஆஷஸ் டெஸ்ட்: முதல் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து 211/3




ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் 3 டெஸ்டுகளில் ஆஸ்திரேலியாவும், 4வது டெஸ்டில் இங்கிலாந்தும் வெற்றி பெற்றன. இதனால் தொடரில் ஆஸ்திரேலியா 31 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான 5வது மற்றும் கடைசி டெஸ்ட் இன்று தொடங்கியது. இதில், டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பேட்டிங் தேர்வு செய்தது.

இதையடுத்து இங்கிலாந்து அணியின் தொடக்க வீரர்களாக ஜாக் கிராவ்லி, பென் டக்கட் களமிறங்கினர். கிராவ்லி 16 ரன்னிலும், டக்கட் 27 ரன்னிலும் அவுட் ஆகினர். அடுத்து வந்த ஜாக்கப் பெத்தல் 10 ரன்னிலும் அவுட் ஆகினர். அடுத்து வந்த ஜோ ரூட் , ஹாரி புரூக் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரும் அரைசதம் விளாசினர்.

முதல் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 211 ரன்கள் சேர்த்துள்ளது. அந்த அணியின் ஜோ ரூட் 72 ரன்னிலும், புரூக் 78 ரன்னிலும் களத்தில் உள்ளனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066